தேதி:29/07/2026

மதுரை மாவட்டம்

MSS **முதல் இடைப் பருவத் தேர்வு – 2026**

11 - ஆம் வகுப்பு **வணிகவியல்**

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

I **அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 10 X 1 = 10

1. இடத்தரகை இதன் மூலம் நீக்கப்படுகிறது.
அ) போக்குவரத்து ஆ) பண்டக சாலை இ) விற்பனையாளர் ஈ) காப்பீடு

2. மருத்துவர் தொழில் என்பது ..... .
அ) வேலைவாய்ப்பு ஆ) தொழில் இ) சிறப்புத் தொழில் ஈ) தனியார் வணிகம்

3. அதிக அளவு அபாயத்தைக் கொண்டது ..... .
அ) உற்பத்தித் தொழில் ஆ) வணிகம் இ) வியாபாரம் ஈ) இவை அனைத்தும்

4. தனியாள் வணிகத்தின் பொறுப்பு ..... .
அ) வரையறு பொறுப்பு ஆ) வரையறாப் பொறுப்பு இ) அமைப்பது எளிது ஈ) விரைவான முடிவு

5. இந்து கூட்டு குடும்பம் யாரால் நிர்வகிக்கப்படுகிறது?
அ) முதலாளி ஆ) கர்த்தா இ) மேலாளர் ஈ) கூட்டாளி

6. கூட்டாண்மை உண்டக்கப்படுவது ..... .
அ) ஒப்பந்தத்தால் ஆ) கூட்டாளிகளிடையே உறவு
இ) அரசின் வழி காட்டல் ஈ) நட்பின் அடிப்படையில்

7. நிறுமச் சட்டத்தின் அட்டவணை - அ (Table - A) என்பது
அ) நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி ஆ) இருப்பு நிலைக் குறிப்பின் மாதிரிப் படிவம்
இ) நிறுமச் செயல் முறை விதிகளின் மாதிரி ஈ) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி

8. நிறுவனத்திற்கும், வெளி நபருக்கும் உள்ள உறவு முறையைப் பற்றிக் குறிப்பிடுவது எது?
அ) தகவலறிக்கை ஆ) சங்க நடைமுறை விதிகள்
இ) அமைப்பு முறையேடு ஈ) கூட்டுருவாக்கம் சான்றிதழ்

9. ராக்டேல் சொசையிட்டி தோற்றுவித்தவர் .....
அ) ராபர்ட் ஓவென் ஆ) H.C. கல்வெர்ட் இ) டால்மாக்கி ஈ) லம்போர்ட்

10. **பொருத்துக.**

நிறுவனம்	–	**குறைந்த பட்ச நபர்கள்**
a) தனி நிறுமம்	–	i) 7
b) பொது நிறுமம்	–	ii) 25
c) கூட்டுறவு சங்கம்	–	iii) 2

அ) a (i) b (iii) c (ii) ஆ) a (iii) b (i) c (ii) இ) a (ii) b(i) c (iii) ஈ) a - (i) b (ii) c (iii)

II **ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. கேள்வி எண் 17 கட்டாயம் விடையளி.** 5 X 2 = 10

11. பண்ட மாற்று முறை என்றால் என்ன?
12. பொருளாதார நடவடிக்கைகள் என்றால் என்ன?
13. வணிகத்தை வரையறு.
14. கூட்டுரு சாரா நிறுவனங்கள் யாவை?
15. கர்த்தா என்பவர் யார்?
16. பட்டய (அ) சாசன நிறுமம் என்றால் என்ன?
17. இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?

III **ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. வினா எண் 24 கட்டாயம்.** 5 X 3 = 15

18. பாண்டியர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?
19. **சிறுகுறிப்பு வரைக.** அ) தொழில் ஆ) சிறப்பு தொழில்
20. சிறுகுறிப்பு வரைக. அ) பகுப்பாய்வு உற்பத்தித் தொழில் ஆ) மரபுசார் உற்பத்தித் தொழில்
21. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
22. கூட்டாண்மை நிறுவனத்தில் குறைந்தபட்ச, அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?
23. அயல் நாட்டு நிறுமம் என்றால் என்ன?
24. இந்திய பன்னாட்டு நிறுவனங்கள் ஏதேனும் மூன்றை குறிப்பிடுக.

IV **அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 3 X 5 = 15

25. அ) வணிகத்தின் பல்வேறு தடைகளைக் கூறுக. ***(அல்லது)***
ஆ) கூட்டாண்மை கலைப்பின் வகைகளை விவரி.
26. அ) உற்பத்தித் தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் ஓர் ஒப்பீடு செய்க. ***(அல்லது)***
ஆ) செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?
27. அ) தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புகள் யாவை? ***(அல்லது)***
ஆ) பன்னாட்டு நிறுமத்தின் நன்மைகளை விவரி.